DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 109/2023 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | தேனம்மை |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.07.2026

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 13.02.2023 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. TN 31 R 2230 MAHANDRA MAXI CAB வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் பதிவிறக்க நகல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. TN 31 R 2230 MAHANDRA MAXI CAB வாகனத்தின் இன்சூரன்ஸ் பதிவிறக்க நகல் **ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 07.03.2023 ம் தேதியிட்ட FORM – AIR சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 02.03.2023 ம் தேதியிட்ட Wound certificate சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. ABC மருத்துவமனையில் ரூ.1,02,288/—க்கான சிகிச்சை பெற்ற ரசீது (எண்ணிக்கை 42) அசல் **ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. Neuro மருத்துவமனையில் ரூ.1,61,174/—க்கான சிகிச்சை பெற்ற ரசீது (எண்ணிக்கை 51) அசல் **ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. ஸ்கேன் எடுத்ததற்கான ரசீது அசல் **ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. 13.02.2023ம் தேதியிட்ட விபத்து பற்றிய வரைபடம் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11. 13.02.2023ம் தேதியிட்ட பார்வை மகஜர் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

12. 10.04.2023ம் தேதியிட்ட STC: 200/2023 குற்றப்பத்திரிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

13. 10.04.2023ம் தேதியிட்ட STC: 200/2023 தீர்ப்புரை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

14. மனுதாரரின் பாஸ்புக் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

15. 28.01.2026ம் தேதியிட்ட ஸ்கேன் ரிப்போர்ட் அசல் **ம.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

16. ரூ.6,651/—க்கான திருச்சி ABC மருத்துவனை பில் அசல் **ம.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. விபத்து சமயத்தில் மீனாள் ட்ரைவிங் ஸ்கூல் வைத்து நிர்வாகம் செய்து மாதம் ரூ.12,000/— வரும் ஈட்டிவந்தேன் என்று சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தெரிந்தால் எடுத்துவந்திருப்பேன். TN 63 AZ 6645 டிவிஎஸ் எக்ஸெல் வாகனம் யார் பேரில் உள்ளது என்றால் என் வீட்டுக்காரர் பேரில் உள்ளது. வாகனத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் என் கணவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

விபத்தின்போது இருசக்கர வாகனத்தை நான் ஓட்டிச் செல்லும்போது தலைக்கவசம் எதுவும் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. விபத்து நடந்த இடம் போக்குவரத்து அதிக நெரிசல் உள்ள இடம் என்றால் சரிதான். அந்த இடத்தில் பென்னி மருத்துவனை இருப்பதால் அங்கு ஸ்பீட் பிரேக் உள்ளது என்றால் சரிதான்.

2. என் டிவிஎஸ்–இல் இடித்தது ஸ்கூல் வாகனம் என்றால் எந்த வாகனம் இடித்தது என்றே எனக்குத் தெரியாது, ஸ்கூல் பிள்ளைகளை கூட்டிவந்த வேன் என்றுதான் என்னிடம் சொன்னார்கள். நான் விபத்து சமயத்தில் வீட்டிற்கு செல்லும்போது எந்த திசையில் இருந்து எந்த திசையில் சென்று கொண்டிருந்தேன் என்றால் ரோட்டின் இடது திசையில் சென்றேன், என் அலுவலகம் ரோட்டின் வலது பக்கமாக உள்ளது. மகேந்திரா வாகனம் ரோட்டின் வலது பக்கமாக வந்தது என்றால் என்னை இடித்த வாகனம் எந்த பக்கத்திலிருந்து வந்தது என்றே எனக்குத் தெரியாது, ஆனால் வலது பக்கமாக வந்ததாக சொன்னார்கள். நான்தான் சாலையின் விதிமுறைகளை கடைபிடிக்காமல் இந்த விபத்தை ஏற்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் ட்ரைவிங் ஸ்கூலில் தான் வேலை பார்த்து வருகிறேன். தற்போது நான் என்ன சம்பளம் வாங்கி வருகிறேன் என்றால் ரூ.20,000/– வாங்கிவருகிறேன். தற்போதும் நான் இருசக்கர வாகனம் ஓட்டிக்கொண்டுதான் நான் வேலைக்குச் சென்று வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு விபத்தின்போது ஏற்பட்ட காயங்கள் அனைத்து ஆறிவிட்டது என்றால் சரிதான், ஞாபக மறதி மட்டும் உள்ளது. விபத்தின் போது ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றும், அதிக இழப்பீடு பெற வேண்டி காயங்களை மிகைப்படுத்தி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. 2ம் எதிர்மனுதாரர் விபத்து காலத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் வைத்திருந்ததாலும், அவர் முறையாக சாலைவிதிகளை கடைபிடித்து வாகனத்தை ஓட்டிவந்தார் என்றும், நான் தான் சாலைவிதிகளை கடைபிடிக்காமல் இந்த விபத்தினை ஏற்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 109/2023 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | பழனியப்பன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.07.2026

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. தேனம்மை என்பவர் எனக்கு என்ன உறவினர் முறை என்றால் என் பெரியம்மா மகள், எனக்கு அக்கா உறவு முறை ஆகும். விபத்து எந்த தேதி, மாதம், வருடம் ஏற்பட்டது என்றால் பிப்ரவரி 13 ஆகும், வருடம் ஞாபகம் இல்லை. நான் விபத்து நடந்த சமயத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் காரைக்குடியில் என் அக்கா வீட்டில் இருந்தேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான், போன் மூலம் எனது அக்கா கணவர் எனக்குத் தகவல் சொன்னார். நான் தேனம்மைக்கு உறவினர் முறை என்பதால்

அவருக்கு ஆதரவாக சம்பவத்தை பார்க்காமலேயே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.